# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 14.01.2011 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல் அஃராஃபின் 200வது வசனத்தை ஓதினார்கள்:**

**பொருள்: மன்னிப்பைக் கடைபிடிப்பீராக. இயல்பிற்கேற்ற செயல்களைப் போதிப்பீராக. அறிவற்றவர்களை விட்டு முகந்திருப்புவீராக. (7:200)**

ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களைக் குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: கான குலுகுஹுல் குர்ஆன் அதாவது அன்னாரின் வாழ்க்கையானது குர்ஆனே கரீமின் கட்டளைகள் மற்றும் நன்னடத்தைகளில் முன்மாதிரியாக இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மிக உயர்ந்த நன்னடத்தைகள் மாபெரும் கடலுக்கு ஒப்பானதாகும். மேலும் கூறினார்கள்: (நீங்கள்) சென்று அக்கடலில் மூழ்கி அந்த மதிப்பிடமுடியாத நன் முத்துக்களைத் தேடிக் கொள்ளுங்கள். மேலும் மிக உயர்ந்த நன்னடத்தையின் எந்த முத்துக்களை நீங்கள் தேடி எடுப்பீர்களோ அதில் எனது அன்பு எஜமானனாகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முத்திரை பதிக்கப்பட்டிருக்கும். இந்த காத்தமிய்யத் நுபுவ்வத்தின் அந்தஸ்தைத்தான் அக்மல்து லகும் தீனகும் வஅத்மம்து அலைக்கும் நிஃமதி (இன்று நான் உங்களுக்காக, உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கி உள்ளேன். மேலும் உங்களுக்கு என அருளை முழுமை செய்துள்ளான் (5:4) என்ற இறை வசனத்தில் நமக்கு தெரிகிறது. ஆக, மார்க்கம் மற்றும் அருள்களில் முழுமை பெறுதல் என்பதனை அன்னார் (ஸல்) அவர்கள் மீது இறுதி வேதத்தை இறக்கி முழுமை செய்து விட்டான். ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட வேறு எவர்தான் இந்த இறை வேதத்தையும் இறை நாட்டத்தையும் புரிந்து கொள்ள முடியும். ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் எந்தவொரு அம்சத்தை நாம் பார்ப்பதாயிருந்தாலும் அது திருக்குர்ஆனின் கட்டளைகளின் விளக்கமாக இருக்கின்றது. மேலும் இறைவனின் கட்டளைக்கிணங்க நமக்கு நல்ல முன்மாதிரியாகவும் இருக்கின்றது. இவ்வேளையில் நான் உங்கள் முன் நல்லியல்புகளைக் கொண்ட மக்களின் உள்ளத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதான நேசத்தை அதிகரிக்கச் செய்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது வாழ்க்கையின் ஒரு சில சம்பவங்களையும், நற்குணங்களையும் எடுத்துரைக்கின்றேன். மேலும் நயவஞ்சகர்கள் தீங்கு செய்த சமயங்களிலும் அவர்களை மன்னிப்பதன் மூலம் இத்தகைய நற்குணத்தை வெளிப்படுத்தினார்கள். இதன் மூலம் வ அஃரில் அனில் ஜாஹிலீன் (அறிவீனர்களை விட்டு முகம் திருப்புவீராக) என்ற வசனத்திற்கேற்ப நடந்தும் காட்டினார்கள். நான் இங்கு குறிப்பிடும் அந்த நல்ல குணம் அஃபு எனும் மன்னிக்கும் குணத்தைப் பற்றியதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனுக்கு நெருக்கமானவர்கள், மிகத் தீய வார்த்தைகளைக் கொண்டு ஏசப்பட்டார்கள். மேலும் அதிக அளவு துன்பமிழைக்கப்பட்டார்கள். எனினும் அறிவீனர்களை விட்டு முகம் திருப்புவீராக என்று தான் அவர்களுக்கு போதனை வழங்கப்பட்டது.

நமது அந்த முழு மனிதராகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களும் துன்பமிழைக்கப்பட்டார்கள். மேலும் தீய வார்த்தைகளைக் கொண்டு அழைக்கப்பட்டார்கள். ஆனால் அந்த மிக உயர்ந்த நன்னடத்தையைக் கொண்ட அந்த மனிதர் (ஸல்), அவர்களுக்கு எதிராக என்ன செய்தார்கள்? அம்மாமனிதர் அவர்களுக்காக துஆ செய்தார்கள். ஏனென்றால் இறைவன் வாக்குறுதி அளித்து விட்டான். நீர் எதிரிகளிடமிருந்து முகம் திருப்பிக் கொண்டால், உமது கண்ணியத்தையும் உயிரையும் பாதுகாப்போம். மேலும் இந்த தீய மக்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்த முடியாது. எதிரிகள் ரஸுல் (ஸல்) அவர்கள் மீது

எந்தவித தீய தாக்குதல்களையும் நடத்த முடியவில்லை. மாறாக, இழிவடைந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கால்களில் விழுந்தார்கள். அல்லது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே அழிந்து போனார்கள்.

இது சாதாரண விஷயமாக இருக்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தாமும், தமது சஹாபாக்களும் சந்தித்த கொடுமையினைப் பார்த்த பின்பும் ஆற்றல், வலிமை கிடைத்த பிறகும் மன்னித்தல் என்ற முன்மாதிரியைக் காட்டும் உதாரணம் உலகம் தோன்றிய நாளிலிருந்து நமக்கு தென்படவில்லை. இது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் ஒரு தனிப்பட்ட சிறப்பாகும். நயவஞ்சகன் மற்றும் தர்பிய்யத் பெறாத மக்களுக்கு எதிராக, அன்னார் (ஸல்) அவர்கள் பொறுமை, மன்னித்தல் என்ற நன்னடத்தையை வெளிப்படுத்தினார்கள். இதுவும் ஓர் சாதாரண விஷயமல்ல. நடுநிலையுடன் சிந்திக்கும் ஒரு வரலாற்றாசிரியர் இருந்தால், மதங்களின் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் அவர் இந்த நன்னடத்தையைக் கூறாமல் இருக்க முடியாது. மேலும் ஒவ்வொரு நன்னடத்தையின் முன்மாதிரியானது எல்லையற்றதாக இருந்தது. மேலும் இந்து, கிறித்தவ மதத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் இவ்வாறே எழுதியிருக்கின்றார்கள். எவ்வாறிருந்தபோதிலும், இவ்வேளையில் நான் ஒரு சில சம்பவங்களை கூறுகின்றேன். இந்த சம்பவமானது அன்னார் (ஸல்) அவர்களின் மிக உயர்ந்த நன்னடத்தையினை எடுத்துரைக்கின்றது.

முதலில் நான் அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூலின் சம்பவத்தை கூறுகின்றேன். இவன் நயவஞ்சகனின் தலைவனாக இருந்தான். வெளிப்படையில் அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டான் என்றாலும், அன்னார் (ஸல்) அவர்களை தீய முறையில் எதிர்ப்பதில் எந்தவோர் பகுதியினையும் விட்டு வைக்கவில்லை. மதீனாவில் இருந்தவாறு தொடர்ந்து இதனை செய்து வந்தான். அவனின் எதிர்ப்பு உண்மையில் எதன் காரணமாக இருந்தது என்றால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திற்கு முன்பு, மதீனாவில் உள்ளவர்கள் அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூலை தலைவராக ஆக்க வேண்டும் என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் அன்னாரின் மதீனா வருகைக்குப் பின்பு ஒவ்வொரு சமுதாயமும், மதத்தினர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஆட்சித் தலைவராக ஏற்றுக் கொண்டனர். அப்போது இந்த மனிதன் வெளிப்படையாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்ட போதிலும் மனதில் எதிர்ப்பே இருந்து வந்தது. மேலும் அந்த எதிர்ப்பு அதிகரித்துக் கொண்டே சென்றது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனா சென்ற பிறகு பத்ர் சம்பவத்திற்கு முன் நிகழ்ந்த ஒரு சம்பவம் அறிவிப்பில் வருகின்றது. அதில் அப்துல்லாஹ் பின் உபய்பின் சுலூலின் மனதில் உள்ள தீய எண்ணங்கள், அசுத்தங்கள் வெளிப்பட்ட அதே சமயத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பொறுமையின் முன்மாதிரியும் வெளிப்பட்டது. உண்மையில் மன்னிக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். இந்த மன்னித்தல் குணமானது, எதிரிகளின் எதிர் நடவடிக்கை மூலம் அதிகமாக பிரகாசமடைந்தது. எவ்வாறிருந்தபோதிலும், அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது.

உர்வா பின் சுபைர் (ரலி) அவர்கள் எனக்கு கூறியதாக இமாம் சூஃபி அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர்வையினைப் போர்த்தியவாறு கழுதையின் மேல் அமர்ந்தார்கள். தமக்குப் பின்னால் உஸாமா பின் ஸைதினை அமர்த்தினார்கள். சஅத் பின் உபாதா (ரலி) அவர்களை நலம் விசாரிக்க பனூ வாரிஸ் பின் கத்ரஜ் என்ற இடத்திற்குச் சென்றார்கள். வழியில் சிலர் அமர்ந்திருந்த கூட்டத்தைக் கடந்து சென்றார்கள். அந்தக் கூட்டத்தில் அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் உட்கார்ந்திருந்தான். அவ்வேளையில் அவன் இஸ்லாத்தினை ஏற்கவில்லை. இந்தக் கூட்டத்தில் முஸ்லிம்களும் அமர்ந்திருந்தார்கள். சிலை வணங்கிகளும் இருந்தார்கள். யூதர்களும் இருந்தார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்களின் மீது கழுதையின் காலடி எழுப்பிய புழுதிகள் விழுந்ததும் அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் தனது போர்வையால் மூக்கினை மூடியவாறு எங்கள் மீது மண்ணை அள்ளிப் போடாதீர்கள் என்று கூறினான். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அங்கிருந்த அனைவருக்கும் சலாம் கூறி தனது சவாரியிலிருந்து இறங்கினார்கள். பின்பு அவர்களை அல்லாஹ்வின் பால் அழைத்து, அவர்களிடம் குர்ஆனை வாசித்துக் காட்டினார்கள். இதனைக்

கேட்ட அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் கூறினான். சாஹிபே! நீர் கூறும் விஷயமானது நல்ல விஷயமல்ல. இது உண்மையானதாக இருந்தாலும் எங்களிடம் இதனைக் கூறி துன்புறுத்தாதே. மாறாக உமது வீட்டிற்குச் செல். அங்கு உம்மிடம் யார் வருவார்களோ அவர்களிடத்தில் உமது குர்ஆனை படித்துக் காட்டு என்று கூறினான். இதனைக் கேட்ட ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஏன் கூறக்கூடாது? அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களுக்கு குர்ஆனை ஓதிக்காட்டுங்கள். ஏனென்றால் நாங்கள் குர்ஆனை காதுகொடுத்து கேட்பதை விரும்புகின்றோம். இதனைக் கேட்ட முஸ்லிம்கள், யூதர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒருவர் மற்றவரின் கழுத்தினை நெறிக்கும் அளவிற்கு ஒருவருக்கொருவர் விவாதம் செய்யத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தொடர்ந்து அவர்களை அமைதிப்படுத்தவே அனைவரும் அமைதியாகி விட்டனர். அனைவரும் அமைதியானவுடன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது சவாரியில் ஏறி சஅத் பின் உபாதாவிடம் சென்றார்கள். அவர்களிடம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் இவ்வாறு கூறினான் என்று கூறவே, சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்களை மன்னியுங்கள். மிக உன்னதமான குர்ஆனாகிய வேதத்தை இறக்கிய அந்த இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் தங்களின் மீது உண்மையை அருளியிருக்கிறான். இந்த ஊரில் வாழும் மக்கள் அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூலுக்கு தமது அரசாட்சியின் கிரீடத்தை வழங்க விரும்பினார்கள். அவனது இடத்தில் அல்லாஹ் தங்களை நியமித்ததும் அவனுக்கு மிகவும் வேதனை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அவன் தங்களுடன் தீய முறையில் நடந்து கொண்டான். எனவே அவரை மன்னித்து விடுங்கள் என்று சஅத் பின் உபாதா (ரலி) கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உபய் பின் சுலூலை ஏற்கனவே மன்னித்து விட்டார்கள். சஅத் பின் உபாதா கூறியதைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மன்னிக்கவில்லை. மாறாக, இன்று அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் இவ்வாறு நடந்து கொண்ட போதிலும் நான் மன்னிக்குமாறு போதிக்கப்பட்டுள்ளேன். மேலும் நான் தொடர்ந்து மன்னிப்பினை வழங்கிக் கொண்டே செல்வேன் என்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சஹாபாக்கள், இணைவைப்பவர்கள், வேதக்காரர்களிடம் எவ்வாறு மன்னிப்பினை வழங்க வேண்டும் என்று அல்லாஹ் கூறியிருக்கின்றானோ அவ்வாறே மன்னிப்பை வழங்கினார்கள். மேலும் அவர்கள் இழைத்து வந்த கொடுமைகளை பொறுமையுடன் சகித்து வந்தார்கள். ஆனால் ஒரு சில நாட்களுக்குப் பிறகு அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் முஸ்லிமான பின்னர் தமது நயவஞ்சகத்தனத்தால் எப்போதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கஷ்டங்களை கொடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒருமுறை ஒரு போருக்குச் சென்று கொண்டிருந்தோம். அப்போது ஒரு முஹாஜிர் ஓர் அன்ஸாரியின் முதுகில் தனது கையைக் கொண்டு அடித்தார்கள். அந்த அன்ஸாரி மிகவும் உரத்த குரலில், அன்ஸாரிகளே! எனக்கு உதவுங்கள் என்று கூறினார். விஷயம் ஒரு மாதிரி செல்கிறதே என்பதை உணர்ந்த முஹாஜிர் உரத்த குரலில் முஹாஜிர்களே! எனக்கு உதவ வாருங்கள் என்று கூறினார். இந்த சப்தங்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கேட்கவே, அன்னார் இது என்ன அறியாமை காலத்து மக்களின் குரல்களைப் போன்று கேட்கின்றன என்று வினவினார்களா. இதற்கு ஓர் முஹாஜிர் ஓர் அன்ஸாரியின் முதுகின் மீது கையைக் கொண்டு அடித்து விட்டார்கள் என்று பதில் கூறப்பட்டது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இவ்வாறு செய்வதை விட்டு விடுங்கள். இது தீய செயலாகும். இது குடிநீருக்காக நிகழ்ந்த சம்பவமாகும். நான் தான் முதலில் குடிப்பேன்; நான் தான் முதலில் குடிப்பேன் என்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டார்கள். எவ்வாறிருந்த போதிலும் இந்த சம்பவத்தை நயவஞ்சகத்தனம் கொண்ட அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் கேட்டதும், அவன் முஹாஜிர் இவ்வாறு செய்திருக்கிறார்கள். நாம் மதீனா திரும்பியதும், மதீனாவின் கண்ணியத்திற்குரிய மனிதன், மதீனாவின் இழிவுக்குரிய மனிதனை வெளியேற்றுவான் என்று கூறினான். (நவூதுபில்லாஹ்) அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூலின் இவ்வாறான பேச்சு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்)

அவர்களுக்கு தெரிய வந்தது. இதனைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எழுந்து நின்று இவ்வாறு கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த நயவஞ்சகனின் தலையை துண்டிக்க எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த பேச்சினைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவனை மன்னித்து விடுங்கள். மேலும் மக்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது உடன் இருப்பவர்களையும் கொன்று விடுகிறார் என்று கூறிவிடக் கூடாது என்று கூறினார்கள். இவ்வாறிருந்தும் கூட அவனின் இச்செயலைக் கண்டும், அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் எதுவரை தம்மைத்தாமே வெளிப்படையாக தான் ஒரு முஸ்லிம் என்று கூறி வந்தானோ அதுவரை அவனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சகோதரரே என்றே அழைத்து வந்தார்கள்.

அறிவிப்பில் இதுவும் காணப்படுகின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் மற்றும் அவனது உடன் இருந்தவர்களை அழைத்து விஷயம் இவ்வாறு பரவி வருகிறது. என்ன நடந்தது? என்று கேட்டார்கள். அதற்கு அனைவரும் மறுத்து விட்டார்கள். ஒரு சில அன்ஸாரிகள் இவ்விஷயத்தில் சிபாரிசு செய்தவாறு எனக்கு முன்புதான் இவ்விஷயம் நடந்தது என்று கூறினார்கள். மேலும் ஸைது (ரலி) சிறுவராக இருந்தார். அவருக்கு அவர் கேட்டதில் தவறு நிகழ்ந்திருக்கலாம் என்று கூறினார்கள். எவ்வாறிருந்த போதிலும், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் வேறு எதனையும் கேட்கவில்லை. அல்லாஹ் இச்சம்பவத்தைப் பற்றிய உண்மையை இல்ஹாம் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு காட்டிய பிறகு, மக்களுக்கு உண்மையுடம் இச்சம்பவம் புரிய வந்தது.

**திருக்குர்ஆனில் இவ்வாறு வருகிறது:**

**நாம் மதீனாவுக்குத் திரும்பினால், மிகுந்த கண்ணியத்திற்குரியவர் மிக்க அற்பவமானவரை நிச்சயமாக அங்கிருந்து வெளியேற்றி விடுவார் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் (உண்மையான) கண்ணியம் அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும், நம்பிக்கை கொண்டவர்களுக்குமே உரியதாகும். இருப்பினும் நயவஞ்சகர்கள் அறிந்து கொள்வதில்லை. (63:9)**

இந்த வசனம் இறங்கிய பின்னர், அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் பொய்யன் என்பதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட யார் தான் அதிகமாக அறிந்திருக்க முடியும். மாறாக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னதாக இவன் நயவஞ்சகன் என்பதை அறிந்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கண்டும் காணாமல் இருந்து வந்தார்கள். அதுமட்டுமல்ல, மதீனாவில் நுழைவதற்கு முன்பே, உண்மையான, நேர்மையான முறையில் திகழ்ந்த அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூலின் மகன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறினான். இவ்வாறான விஷயத்தை நான் கேட்டேன். தங்களுக்கு அவரை கொல்ல வேண்டும் என்ற விருப்பம் இருந்தால். எனக்கு எனது தந்தையின் கழுத்தை வெட்டுவதற்கு அனுமதி தாருங்கள் என்று கூறினார். (வேறு யாராவது எனது தந்தையை கொன்றால்) அறியாமை காலத்தில் நான் உணர்ச்சிவசப்பட்டதைப் போன்று இப்போது எனது தந்தையினை கொன்றவரை நான் கொன்று விட்டு பாவியாகி விடக் கூடாது என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யாரையும் கொல்வதற்கான எண்ணமும் இல்லை. மாறாக, உமது தந்தையுடன் மென்மையான முறையில் நான் நடந்து கொள்வேன் என்று கூறினார்கள். இப்பயணத்தின் வேளையில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பின்தங்கி விட்டார்கள். பயணக்குழு அங்கிருந்து கடந்து சென்று விட்ட பிறகு, ஒரு சஹாபி பயணக்குழு சென்று விட்ட பிறகு, அந்தக் குழு இளைப்பாறிய இடத்தில் ஏதேனும் பொருள்கள் விடப்பட்டுள்ளதோ என்பதை நோட்டமிட்டவாறு வந்த போது, அங்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் கண்ட போது இன்னாலில்லாஹ் என்று கூறினார். இதனைக் கண்ட ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உடனே கண்விழித்து தன்மீது போர்வையினை போர்த்திக் கொண்டார்கள். அந்த சஹாபி தனது ஒட்டகத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை அமர்த்தியவாறு பயணத்தை தொடர்ந்து, பயணக்குழுக்களை அடைந்தார்கள். அப்போது இதே நயவஞ்சகர்கள் பல்வேறு வதந்திகளைப் பரப்பத் தொடங்கி விட்டனர். தவறான குற்றச்சாட்டுகளை (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் ஆயிஷா

(ரலி) அவர்கள் மீது இட்டுக்கட்டி கூறத் தொடங்கினர். இதனைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் துயரமடைந்தார்கள். இத்தகைய குற்றச்சாட்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தீங்கிழைக்கும் காரியமும் அதற்கான முயற்சியுமாகும். இச்சம்பவத்திற்கு பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்தடைந்தார்கள். ஒருநாள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜிதில் வருகை தந்து மக்கள் முன் உரையாற்றியவாறு கூறினார்கள். அதன் வாசகம் இதுவாகும். அதாவது எனக்கு எனது உறவினர்களை தொடர்புபடுத்தி முன்பு கஷ்டத்தை தந்துள்ளார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அத்தகைய நயவஞ்சகர்களின் இவ்வாறான விஷயங்களைக் கேட்டு பொறுமையை கையாண்டார்கள். எவர்கள் எல்லாம் இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்களோ அவர்களை உடனே தண்டித்து விடவில்லை. அல்லாஹ்விடமிருந்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தூய்மையானவர் என்ற இல்ஹாம் வந்தும் கூட அத்தகைய நயவஞ்சகர்களுக்கு தண்டனை வழங்கவில்லை. இவர்கள் இட்டுக்கட்டி கூறுகின்றார்கள் என்பதை அறிந்திருந்தார்கள். மேலும் மன்னிக்கவும் செய்தார்கள்.

அறிவிப்பில் வருகிறது. அப்துல்லாஹ் பின் உபய் பின் சுலூல் இறந்த பிறகு, நான் கூறியது போன்று நேர்மையான முஸ்லிமாக திகழ்ந்த அவனது மகன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். தங்களின் மேலாடையினை எனக்கு தாருங்கள். இதனைக் கொண்டு எனது தந்தையை அடக்கம் செய்வேன் என்று கூறினர்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது மேலாடையை வழங்கினார்கள். அதுமட்டுமல்லாமல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தாமே சென்று அவனக்கு ஜனாஸா தொழ வைத்தார்கள். கபரில் துஆ செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவர் முனாஃபிக் (நயவஞ்சகன்) ஆவார் என்பதை தாங்கள் அறிவீர்கள். மேலும் அல்லாஹ் நயவஞ்சகன் சார்பாக இவ்வாறு கூறுகிறான். நீர் அவர்களுக்காக 70 முறை பாவமன்னிப்புக் கோரினாலும் அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படாது. இதைக் கேட்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ் இதில் ஓர் அனுமதியையும் வழங்கியுள்ளான். அந்த வகையில் நான் 70 முறைக்கும் அதிகமாக பாவமன்னிப்புக் கோருவேன். அதை விட அதிகமாக பாவமன்னிப்புக் கோர நேர்ந்தாலும் அவ்வாறு செய்வேன் என்று கூறினார்கள். இதுதான் அன்னாரின் நடைமுறையாக இருந்தது. இதனைத்தான் அந்த நயவஞ்சகர்களிடம் வெளிப்படுத்திக் காட்டினார்கள். அதனை தொடர்ந்து செய்தார்கள். நயவஞ்சகர்களின் தலைவனிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்து கொண்ட விதத்தினை கூறினேன். இப்போது மற்றொரு உதாரணத்தை எடுத்து வைக்கின்றேன்.

தர்பிய்யத் பெறாத காட்டரபிகளில் சிலர் ஒழுக்கமில்லாத செயல்களை செய்து வந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தை அறியாத மக்களாக இருந்தார்கள். அவர்கள் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு மன்னிக்கும் பண்பினை வெளிப்படுத்தினார்கள் என்பது பற்றி ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு அடர்த்தியான போர்வையை தமது உடம்பில் போர்த்தியிருந்தார்கள். ஒரு காட்டரபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போர்வையினை எந்த அளவுக்கு வலுவாக இழுத்தான் என்றால் அதனால் அந்தப் போர்வையின் அடர்த்தியான ஓரப்பகுதியின் அடையாளம் அவர்களின் கழுத்தில் பதிந்து விட்டது. பிறகு அவன் கூறினான். அல்லாஹ்வின் தூதரே (ஸல்) உமக்கு இறைவன் வழங்கிய பொருள்களில் இந்த இரண்டு ஒட்டகத்தின் சுமை அளவு தாருங்கள் எனக் கேட்டான். நீர் உம்முடைய அல்லது உமது தந்தையின் பொருளை எனக்கு தர வேண்டாம். அல்லாஹ் உமக்கு வழங்கியதிலிருந்து தாரும் என்று கூறினான். அவனது இந்த வெறுக்கத்தக்க பேச்சினை கேட்டு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மவுனமாக இருந்தார்கள். பிறகு கூறினார்கள்: அல்மாலு மாலுல்லாஹி வஅனா அப்துஹூ (அனைத்தும் இறைவனுடையதுதான். மேலும் நான் இறை அடியான் ஆவேன்.) பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீ எனக்கு கொடுத்த துன்பத்திற்கு பழிவாங்கப்படும். அதற்கு அந்த காட்டரபி என்னை பழிவாங்க முடியாது என்று கூறினான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உன்னை ஏன் பழிவாங்க முடியாது?

என்று கேட்டார்கள். அந்த காட்டரபி ஏனென்றால் நீங்கள் தீயவற்றிற்குப் பதிலாக தீயவற்றை செய்யமாட்டீர்கள் என்று கூறினான். இதனை அவன் கூறவே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள்.

இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மென்மையான குணங்கள் நமக்கு தெரிய வருகின்றது. இதனால் அவ்வாறான மக்களுக்கு உள்ளத்தில் நேர்வழியைச் செய்யும் அளவிற்கான தைரியம் உருவாகி இருந்தது.

பின்பு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இவன் கேட்ட இரண்டு ஒட்டகங்களில் ஒன்றில் பார்லியையும், மற்றொரு ஒட்டகத்தில் பேரீத்தம்பழத்தையும் வைத்து கொடுங்கள் என்று கூறினார்கள். பின்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதற்கு ஒரு சில உதாரணங்களை எடுத்து வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

மக்கத்து குறைஷிகளின் 80 நபர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரது சஹாபாக்களின் மீதும் திடீரென்று ஃபஜ்ர் தொழுகையின் வேளையில் தனீன் என்ற மலையிலிருந்து தாக்குதல் செய்யத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களைக் கொன்று விட வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாகும். ஆனால் அவர்களோ பிடிபட்டு விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களை மன்னித்து விட்டு விட்டார்கள்.

ஆக, இன்றைய காலத்தில் மன்னித்தலின் ஓர் உதாரணத்தை யாராலும் காட்ட இயலுமா? இவர்கள் போர் குற்றவாளிகளாக இருந்தபோதிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உங்களுக்கு எந்த தண்டனையும் கிடையாது என்று மன்னித்து அனுப்பினார்கள்.

பிறகு ஓர் அறிவிப்பு, **ஹஷாம் பின் ஸைது பின் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நான் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்டேன். ஒருமுறை ஒரு யூதன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் அருகாமையில் கடந்து சென்ற போது அவன் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவதற்குப் பதிலாக அஸ்ஸாமு அலைக் – அதாவது, உம்மீது நாசம் உண்டாவதாக என்று கூறினான். பின்பு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை நோக்கி, இவன் என்ன கூறினான் என்பது உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அவன் அஸ்ஸாமு அலைக்க என்று கூறினான் என்று கூறினார்கள். சஹாபாக்கள் யூதனின் இந்த செயலைக் கண்டு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் நாம் இவனை கொன்று விடட்டுமா என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கொல்ல வேண்டாம் என கூறினார்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மன்னிக்கும் பண்பு தம்மைச் சேர்ந்தவர்களிடம் மட்டுமல்ல. மற்ற மக்களிடத்திலும் அத்தகைய பண்பை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்றவோர் பாடத்தை கற்றுக் கொடுத்தார்கள். மேலும் எவர்கள் தம்மீது கொடுமை இழைக்கின்றார்களோ அவர்கள் மீதும் தயவு காட்ட வேண்டும். இறை கட்டளையின் எல்லைக்குட்பட்ட குற்றத்திற்காக மட்டுமே தண்டனை வழங்க வேண்டும். இது சம்பந்தமாக இறைவன் தண்டனையை நியமித்திருக்கின்றான். அல்லாஹ் எது சம்பந்தமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறினானோ அது குர்ஆனில் உள்ளது. பின்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் சஹாபாக்களுக்கு ஒரு யூதப் பெண் இறைச்சியில் விஷத்தைக் கலந்து கொடுக்க முற்பட்டு, அந்தக் குற்றத்தை அவள் ஒப்புக்கொண்ட போதிலும் கூட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவளை மன்னித்து விட்டார்கள். சஹாபாக்களுக்கு கோபமாக இருந்தது. நாம் இவர்களை கொன்று விடுவோமா என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வேண்டாம் என்று பதில் அளித்தார்கள்.

பிறகு ஒரு வாஹ்ஷி சம்பந்தப்பட்ட ஓர் அறிவிப்பு. இது நீண்ட அறிவிப்பாகும். அவர் கூறுகின்றார். நான் ஹஸ்ரத் ஹம்ஸாவை ஷஹீதாக்கிய பிறகு மக்கா திரும்பி வந்தேன். பின்பு இங்கேயே எனது வாழ்வை கழித்து வந்தேன். பின்பு நான் தாயிஃப் சென்று விட்டேன். தாயிஃப் வாசிகள் ஒருமுறை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் தமது ஓர் தூதுக் குழுவை அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தூதுக்குழுவினரைப் பழிவாங்க மாட்டார்கள் என்பது எனக்கு தெரிய வந்தது. அந்த வகையில் நானும் தாயிஃப் வாசிகளின் தூதுக்குழுவுடன் இணைந்து கொண்டேன். நான் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடத்தில் வந்தபொழுது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னைக் கண்டு நீர் வஹ்ஷியா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம் நான் வஹ்ஷி தான் என்று கூறினேன். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீர் தான் ஹம்ஸாவை கொன்றீரா? என்று கேட்க வஹ்ஷி அதற்கு பதில் அளித்தவாறு நீங்கள் கேட்டது போன்று சம்பவம் அவ்வாறே நடந்தது என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் என்னை மன்னித்தவாறு இவ்வாறு கூறினார்கள். நீர் முடிந்தவரை என் முன்பாக வராதிருப்பீராக! என்று கூறினார்கள். இதன் பிறகு நான் மதீனா சென்று விட்டேன்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் அந்த வஹ்ஷி நான் ஹம்ஸாவை எவ்வாறு ஷஹீதாக்கினேன் என்ற சம்பவத்தைக் கூறிய போது சஹாபாக்கள் கூறுகின்றனர். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. தனது சச்சாவை நினைவுபடுத்தியபோது நிச்சயமாக இந்தக் கண்ணீர் வெளிவரத்தான் செய்யும். அவர்கள் பத்ர் போரின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு உதவினார்கள். ஆனால் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீதான பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பழிவாங்கும் ஆற்றல் இருந்தும்கூட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மன்னித்தல் என்ற குணத்தையே வெளிப்படுத்தினார்கள். இவ்வாறு அந்த வாஹ்ஷியை மன்னித்தார்கள்.

மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இக்ரிமாவை கொன்றுவிட கட்டளையிட்டார்கள். ஏனென்றால் இவர் போர் குற்றவாளியாக இருந்தார். இதனால்தான் கொலைக்கான கட்டளையை விடுத்தார்கள். இக்ரிமாவும், இவரது தந்தை அபூஜஹிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது சஹாபாக்களை கடுமையான அளவில் துன்புறுத்தியிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், இக்ரிமாவை கொலை செய்யுங்கள் என்று கட்டளையிட்ட செய்தி இக்ரிமாவுக்கு கிடைத்தவுடன் அவர் யமனை நோக்கி ஓடி விட்டார். இவருக்குப் பின்பே ஹாரிஸ் பின் ஹஷ்ஷாமின் புதல்வியான அவரது மனைவி சென்று கப்பலில் ஏறுவதற்காக காத்திருந்த அவரைக் கண்டார். இன்னும் ஓர் அறிவிப்பின்படி இக்ரிமா கப்பலில் ஏறிவிட்டார் என்று வருகிறது. பிறகு அவரது மனைவி அவரிடம், எனது சச்சாவின் வழியில் வந்தவரே, அந்த மனிதர் அதிகமான அளவு உறவுகளைப் பேணக்கூடியவர்; அதிகமான அளவு நன்முறையில் நடந்து கொள்பவர்; மக்களிடையே மிகச் சிறந்தவரிடமிருந்து நீர் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளாதீர். நான் உமக்காக பாதுகாப்பினை பெற்று விட்டேன். மன்னித்து விடுவார்கள் என்று கூறினார். இக்ரிமா தமது மனைவியுடன் திரும்பி வந்து, முஹம்மதே! தாங்கள் எனக்கு பாதுகாப்பு வழங்கி விட்டீர்கள் என்று எனது மனைவி கூறினாள் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவர் சரியாகத்தான் கூறியிருக்கிறார். உங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு விட்டது என்று கூறினார்கள். இதனைக் கேட்டவுடனே இக்ரிமா அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீகலஹு வஅஷ்ஹது அன்னக அப்துஹு வரஸூஹு என்று கூறி வெட்கத்தின் காரணமாக தலைகுனிந்து நின்றார். இதனைக் கண்ட ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் இக்ரிமாவே! எனது ஆற்றலில் இருக்கும் எதனை வேண்டுமானாலும் நீ கேட்டால் நான் உமக்கு வழங்கி விடுவேன் என்று கூறினார்கள். அதற்கு இக்ரிமா, நான் தங்களுக்கு செய்த அனைத்து தீய செயல்களையும் மன்னித்து விடுங்கள் என்று கூறினார். இதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தவாறு இவ்வாறு துஆ செய்தார்கள்.

அல்லாஹ்வே! இக்ரிமா எனக்கெதிராக செய்த அனைத்து தீய செயல்களையும் மன்னித்து விடுவாயாக! மேலும் கூறினார்கள். அல்லாஹ்வே! இக்ரிமா எனக்கு எதிராக என்னவெல்லாம் கூறி வந்தாரோ அதனை மன்னித்து, அவருக்கு மன்னிப்பை வழங்குவாயாக!

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லம் இன்னக்க ஹமீதும் மஜீத்.

மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தவாஃப் செய்வதற்காக நின்ற போது, ஃபஸானா பின் உமைர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் கொல்வதற்காக அவரது அருகில் வந்தான். அல்லாஹ் இந்தத் திட்டத்தினைப் பற்றிய செய்தியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அறிவித்து விட்டான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனைப் பார்த்து அழைத்த போது அவன் பதறிப்போய் விட்டான். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனிடம் எந்த எண்ணத்தில் இங்கு வந்திருக்கிறாய் என்று கேட்டார்கள். பிடிபட்ட பிறகு அவன் பொய்யைத்தான் கூறுவான் என்பது வெளிப்படையான ஒன்று. பல்வேறு காரணங்களைக் கூறினான். இதனைக் கேட்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள். பின்பு பாசத்துடன் அவரை தம்மிடத்தில் அழைத்து அவனிடத்தில், என்ன ஆயுதங்கள் இருக்கிறது; எந்த எண்ணத்தில் வந்திருக்கிறான் என்ற எந்த அச்சமுமின்றி தனது கையினை வைத்தார்கள். ஃபஸாலா கூறுகின்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது கையை எனது நெஞ்சில் வைத்தவுடன் எனது அனைத்து கோபங்களும் தூர விலகிவிட்டன. எந்தவொரு மஹானை நாம் கொலை செய்ய வேண்டும் என்று நினைத்து வந்தேனோ அவரின் நேசம், பாசமானது எனது உள்ளத்தில் அன்பின் நதியினை பெருக்கெடுத்து ஓடச் செய்து விட்டது.

ஆக, இதுதான் எனது எஜமானர் (ஸல்) அவர்கள் தமது எதிரிகளுடன் நடந்து கொண்ட முன்மாதிரியாகும். குற்றவாளி பிடிபட்டவுடன் அவனுக்கு தண்டனை வழங்குவதற்குப் பதிலாக நேசத்தின் அம்பினை கொண்டு எந்த அளவுக்கு காயப்படுத்தினார்கள் என்றால், எதிரிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக தமது உயிரைக்கூட கொடுத்து விடுவதற்கு முன்வந்தார்கள்.

இதனைப் போன்ற நேசம் மற்றும் மன்னிக்கும் குணத்தினை வெளிப்படுத்த முடியுமா? ஆனால் நாம் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் உங்களுக்காக உஸ்வாயே ஹஸனா (நல் முன்மாதிரியாக) இருக்கின்றார் என்ற இறைவனின் இக்கூற்றினை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆக, இம்முன்மாதிரியின்படி நடத்தல், அதன் பக்கம் கவனம் செலுத்துதல் இன்றைய காலத்து முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். இவர்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் இரண்டு விஷயங்களில் ஒரு விஷயத்தைத் தேர்ந்தெடுக்கும்படி கூறப்பட்டால், அவர்கள் மிக எளிய விஷயத்தை தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் எதனை தேர்ந்தெடுப்பது பாவமாகுமோ அதிலிருந்து விலகுவதில் மக்கள் அனைவரை விடவும் மிக அதிகமாக விலகியவராக இருப்பார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது தனிப்பட்ட விஷயத்திற்காக எவரையும் பழிவாங்கியதில்லை. எவரேனும் அல்லாஹ் நியமித்த அந்த எல்லைக்குள் தகாத காரணத்தைக் கொண்டு நுழைந்தால் இறைவனுக்காக அவருக்கு தண்டனை வழங்குவார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

அவர்கள் ஒருமுறை பேசிக் கொண்டிருந்த போது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை நோக்கி, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது பெற்றோர்கள் உங்கள் மீது அர்ப்பணம் ஆகட்டும். ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்கள் தமது எதிரிகளை நோக்கி இவ்வாறு (ஃபத்வா) பழித்தார்கள்.

என் இறைவா! பூமியில் நிராகரிப்பவர்களின் எந்த வீட்டையும் நீ விட்டு வைக்காதிருப்பாயாக! (71:27)

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்களும் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களைப் போன்று பழித்தீர்கள் என்றால், நாங்கள் அனைவரும் அழிந்திருப்போம். தாங்கள் அடிபட்டார்கள். அடிபட்டதின் காரணமாக முகத்திலிருந்து இரத்தம் வழிந்தது. அவர்களின் பற்கள் உடைக்கப்பட்டது. அவ்வேளையிலும் கூட தாங்கள் நல்ல துஆவைத்தான் செய்தீர்கள். மேலும் தாங்கள் இவ்வாறு துஆ செய்தீர்கள்.

அல்லாஹ்வே! எனது சமுதாயத்தினை மன்னித்து விடுவாயாக! இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று இவர்களுக்கே தெரியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள், மக்காவாசிகள் மற்றும் பிற மக்களின் மீது முழுமையான வெற்றி கண்டவுடன், அவர்களை தமது வாளின் கீழ் கொண்டு வந்த பிறகு தான் அவர்களை மன்னித்தார்கள். மேலும் எவருக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட கட்டளையானது இறைவனிடமிருந்து கிடைத்ததோ அவர்களுக்கே தண்டனை கொடுத்தார்கள். அவர்கள் உண்மையில் கொடுமைக்காரர்களாக இருந்தபோதிலும் அவர்களின் அனைத்து பாவங்களையும் மன்னித்து விட்டார்கள். மேலும் அனைவரின் மீதும் முழுமையான வெற்றியினைக் கண்டு அனைவரையும் நோக்கி, லா தஸ்ரீப் அலைக்குமுல் யவ்ம் என்று கூறினார்கள். மேலும் எதிரிகளின் பார்வையில் முடியாத ஒரு காரியமாகத் திகழ்ந்த மன்னிப்பினை வழங்கியதன் காரணத்தினால், அந்த மக்கள் தமது தவறான செயலினை நினைத்து தாம் தண்டனையின் பிடியில் இருக்கிறோம் என்றும், தண்டிக்கப்படுவோம் என்றும் நினைத்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மன்னிக்கும் குணத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஒரே சமயத்தில் ஒன்றுசேர்ந்து இஸ்லாமிய மார்க்கத்தை ஒப்புக்கொண்டார்கள்.

ஆக, இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மன்னிக்கும் குணமாக இருந்தது. இவ்வாறு மன்னிப்பை வழங்க முடியும் என்பது வெளிப்படையில் எதிரிகளின் பார்வையில் மிகவும் கஷ்டமான விஷயமாகத்தான் இருந்தது. ஆனால் இந்த நடைமுறையினை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கண்டபோது, அதன் விளைவாக அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். இக்கருத்தினை இன்றைய முஸ்லிம்களும் புரிந்தார்கள் என்றால் இஸ்லாத்தின் தூதுச் செய்தியினை எட்ட வைப்பதில் பன்மடங்கு முன்னேற்றங்களை வழங்கி இருக்கலாம். இவர்கள் தீயதை நாடுபவர்களின் வட்டத்திலிருந்து வெளியேறி, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காட்டிய முன்மாதிரியினை சிந்திக்க வேண்டும்.

அல்லாஹ் இவர்களுக்கு அறிவினை வழங்குவானாக! (ஆமீன்).

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 14.01.2011**

Translated by : **Maulvi R. ABDULLAH**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**